AMMA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



ஏழாலை கிழக்கு

சைவப்பெரியார்

# சின்னத்தம்பி முருகேசு

அவர்களின்

# நினைவு மலர்

மண்ணுலகு:
03-10-1891

விண்ணுலகு:
17-04-1981

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரார்த்தனை

கடவுளை நோக்கி வணங்குவதும் பிரார்த்திப்பதும் குறையிரப்பதும் வெறும் மூடநம்பிக்கையல்ல. உண்பது, பருகுவது போன்ற காரியங்களைவிட அவையே உண்மையான காரியங்கள். அவைதான் உண்மை, மற்றவையெல்லாம் உண்மையில்லை என்று கூறினால் கூட உயர்வு நவிற்சி ஆகாது.

தவறான குணங்களை அகற்றி மனத்தைத் தூய்மை செய்வதற்குப் பிரார்த்தனையைவிட அதிக நிச்சயமான சாதனம் வேறு கிடையாது. ஆனால் அந்தப் பலன் வேண்டுமானால் அதனுடன் பரிபூரண பணிவும் தேவையாகும்.

ஆகாரமில்லாமல்கூட பலநாள் வாழமுடியும் ஆனால் பிரார்த்தனையில்லாமல் அரை வினாடி கூட வாழ முடியாது. ஏனெனில் பிரார்த்தனையில்லாவிட்டால் மனச்சாந்தி கிடையாது.

இதயத்தில் கடவுள் இருப்பதாக உறுதியான நம்பிக்கையில்லாதவர் பிரார்த்தனை செய்ய முடியாது.

மனம் தூய்மையடைவதற்காகத் தினந்தோறும் பிரார்த்தனை செய்தால் நாளுக்குநாள் அதிகமாகத் தூய்மை அடைந்து வருவோம். இதயத்தால் செய்யாமல் வாயால் மட்டும் செய்யும் பிரார்த்தனை பயனற்றது என்பது மட்டுமன்று, தீமையும் செய்யும். கடமையைச் செய்துவிட்டதாக நாமே நம்மை ஏமாற்றிக்கொள்ளும்படி செய்துவிடும்.

நாம் கடவுளுடைய நாமத்தை முழுமனதுடன் பஜித்தால் நம்மிடமுள்ள காமம், பொய் முதலிய சகல துர்க்குணங்களும் தாமாகவே அகன்று போகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவபதம் அடைந்த
# சி. முருகேசு ஆசிரியர்

—நா. முத்தையா—
(ஆசிரியர்: "ஆத்மஜோதி")

தெல்லிப்பழை துர்க்கை அம்மன் கோயில் கும்பாபிஷேக தினத்திற்கு முதல்நாள், கோயில் வீதியில் உள்ள திருமுறை மண்டபத்தில் ஸ்ரீலஸ்ரீ ஹரிதாஸ்கிரி சுவாமிகளுடைய சங்கீத உபந்நியாசம் நடைபெற்றுக்கொண்டிருந்தது. உபந்நியாச முடிவில் ஒரு அன்பர் வந்து "உங்களை முருகேசு உபாத்தியாயர் பார்க்க விரும்புகிறார்" என்றார். அவரை நாடிச் சென்றேன். அடியேன் அவரைக் காணுமுன்பு அவர் அடியேனைக் கண்டுவிட்டார். நீண்ட நாட்களாகக் காணாத ஒரு மைந்தனை ஒரு தாய் கண்டுவிட்டால் எவ்வளவு அன்புடன் கட்டித் தழுவுவாளோ அந்த அன்பினும் மேலாகத் தழுவி முகமெலாம் தலையெலாம் தழுவினார்.

இந்த அன்புப் பிடியிலிருந்து அடியேனை விடுவித்துக்கொள்ள முடியவில்லை. 'எப்போ வீட்டிற்கு வருவாய்?' என்றார்கள். நாளை கும்பாபிஷேகம். அது முடிந்து நாளையின்றைக்கு வருவதாகக் கூறினேன். 'நானும் நாளைக்குக் கும்பாபிஷேகத்திற்கு வருகின்றேன்' என்று கூறிச் சென்றார்கள். கும்பாபிஷேக தினத்தன்று காலை தொடங்கிமாலை வரையில் கோயிலிலேயே இருந்தேன். அவர் வரவில்லை. ஹரிதாஸ் சுவாமிகளுடைய இன்னிசைப் பேச்சு நிகழ்ந்துகொண்டிருக்கின்றது. இடை நடுவில் என்னையும் அறியாமல் எழுந்து வெளியே வந்தேன். ஏன் வந்தேன் என்பது எனக்கே தெரியாது. உபாத்தியாயர் சிவபதம் அடைந்துவிட்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தியைச் சுமந்துகொண்டு வந்து நாக்குழறக் கூறினார் எனது மருமகன் ஒருவர்.

மரணம் என்பது இயற்கையானாலும் சிலகணம் திகைத்து நின்றேன். சுயநிலைக்கு வந்தேன். அவரது மரணம் மிகத் தெய்வீகம் வாய்ந்தது என்பதைப்பற்றி மனம் அசைபோட்டது. அன்று மாலை 3 மணி அளவில் சிறிது மயக்கம் ஏற்பட்டது. அடுத்த வீட்டில் இருந்த ஆயுள்வேத வைத்தியர் உடனே வந்து கைநாடி பார்த்து மருந்து கொடுத்துச்சென்றார். ஐந்து மணி அளவில் வைத்தியரை அழைத்து வந்து காட்டினார்கள். உயிர்ப்பு அடங்குகிற நேரம் என்பதை வைத்தியர் உணர்ந்து கொண்டார். ''உயிர் மங்குபொழுது கடிதே மயிலின் மிசை வரவேண்டும்'' என்று அருணகிரியார் பாடிய வண்ணம் உயிர் மங்குகிறநேரம். இன்னும் அரை மணியில் தெளிவு ஏற்பட்டுவிடும் என்று சொல்லிவிட்டு வைத்தியர் சென்றுவிட்டார். உயிர் உடலைவிட்டுப் பிரியும்போது எவ்வித சந்தடியோ, சஞ்சலமோ இருக்கக்கூடாது என்பதற்காகத்தான் வைத்தியர் அங்ஙனம் கூறிச்சென்றார்.

நேரம் மாலை ஐந்தரை மணி இருக்கும். வீட்டில் உள்ளவர்களுக்குச் சந்தேகம் ஏற்பட்டுவிட்டது. காலைத் தொட்டுப் பார்த்தார்கள். 'ஜில்' என்று குளிர்ந்தது. உபாத்தியாயர் சிவபதம் அடைந்துவிட்டார் என்பதை இப்போதான் வீட்டில் உள்ளவர்களால் உணர முடிந்தது. உபாத்தியாயருடைய மரணம் நல்ல மரணம் என்று எல்லோரும் பேசிக்கொண்டார்கள். அப்போதான் சிதம்பர சுவாமிகள் பாடியருளிய பாடல் ஒன்று நினைவுக்கு வந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''நோயுற் றடராமல் நொந்துமனம் வாடாமல்
பாயிற் கிடவாமல் பாவியேன் — காயத்தை
ஓர் நொடிக்குள் நீக்கி எனை ஒண்போரூர் ஐயா நின்
சீரடிக்கீழ் வைப்பாய் தெரிந்து.''

ஏழாலை ஒரு பெரிய கிராமம். சராசரி வீட்டுக்கு ஒரு உபாத்தியாயர் என்று கூறலாம். இத்தனை உபாத்தியாயர்களை ஏழாலை பெற்றிருந்தாலும், ஐயர் என்றால் சுவாமிநாத ஐயரையும், பிள்ளை என்றால் மீனாட்சி சுந்தரம் பிள்ளையையும், நாவலர் என்றால், ஆறுமுகநாவலரையும் குறிப்பதேபோல் ஏழாலையில் உபாத்தியாயர் என்றால் இவரையே குறிக்கும். ஏழாலையில் உபாத்தியாயர் என்ற பெயரை தமக்கே சிறப்புப் பெயராக்கிக் கொண்டவர்கள். இதற்குக் காரணம் இவரது நேர்மை, ஒழுக்கம், தன்னலம் கருதாத சமூகத் தொண்டு, தெய்வபக்தி என்று துணிந்து கூறலாம்.

இவரது பகைவர்கள் கூட இவரது நேர்மை, ஒழுக்கத்தில் சந்தேகித்தது கிடையாது. இந்தக் காலத்தில் சிறிய பதவிகளுக்கெல்லாம் பெரிய மனிதர்கள் போட்டி போட்டுக்கொண்டு ஓடுவதைப் பார்க்கிறோம். அவர்கள் எவ்வளவு வேகமாகப் பின்னால் ஓடுகின்றார்களோ அவ்வளவு வேகமாகப் பதவிகள் ஓடிக்கொண்டிருப்பதையும் காண்கின்றோம். ஆனால் முருகேசு ஆசிரியரை நோக்கி கிராமச் சங்க அங்கத்தவர் பதவியும், கிராமச்சங்க தலைவர் பதவியும், கிராமச்சங்க நீதிபதிப் பதவியும், ஐக்கிய நாணய சங்கத் தலைவர் பதவியும், ஏழாலை அத்தியடி விநாயகர் பரிபாலனப் பதவியும், ஏழாலை இலந்தைகட்டி வயிரவர் கோயில் பரிபாலனச் சபைத்தலைவர் பதவியும் வீடு நோக்கி வந்தன. யார் யார் எந்தெந்த நேரத்தில் எந்தெந்த பதவிகளை விரும்பினார்களோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தந்த நேரத்தில் அந்தந்தப் பதவிகளைக் கொடுத்துவிட்டு வாழ்க்கை முழுவதும் தம்மைச் சமூகப் பணிக்கும் சமயப் பணிக்கும் அர்ப்பணித்துக்கொண்டார்கள்.

அவர்கள் இருக்கும்வரை அவரது அருமையை பலரால் உணர்ந்துகொள்ள முடியவில்லை. இன்று அவரது மறைவால் ஏற்பட்ட இடைவெளியை யாராலும் நிரப்ப முடியவில்லை. இப்போதான் அவரது அருமை பெருமைகளை உணரமுடிகிறது.

இன்று மாவட்டசபைக்கு ஆள்தேடித்திரிகின்றார்கள். ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு முருகேசு ஆசிரியர் அளவெட்டி, மல்லாகம், ஏழாலை, புன்னாலைக்கட்டுவன் ஆகிய நான்கு கிராமங்கள்கொண்ட கிராமச்சங்கத்தின் தலைவராக இருந்து யாரிடத்தும் ஒரு குறையும் கேளாது சமூக சேவை செய்தார்கள் என்றால் அவரது உள்ளப் பண்பை யாரால்தான் அளவிட்டுரைக்க முடியும்?

ஏழாலை அத்தியடி விநாயகப்பெருமானுடைய கோயில் பரிபாலனத்தை ஏற்றுக்கொண்டபின், தமது வாழ்க்கை முழுவதையும் அக்கோயிலுக்கே அர்ப்பணம் செய்து கொண்டார்கள். அக்கோயில் திருப்பணியை அவர் ஒருவராகவே இருந்து எவ்வாறு செய்து முடித்தார் என்பது எல்லாராலும் விளங்கிக்கொள்ள முடியாத ஒரு அற்புதம். அவருடைய உள்ளத்திலே இருந்த ஒரே ஒரு ஆசை விநாயகப்பெருமானை ஒரு சிறிய தேரிலாவது வைத்து நாலு கோயில் வீதியிலும் எழுந்தருளச் செய்ய வேண்டும் என்பதுதான். அந்த ஆசையை நாம் நிறைவேற்றி விட்டால் அவருக்கு மீண்டும் பிறப்பு இல்லை. நாம் அப்பணியைச் செய்து முடிக்கத் தவறுவோமானால் அவர் மீண்டும் அப்பணிக்கென்றே பிறந்து அப்பணியை நிறைவேற்றுவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1913ஆம் ஆண்டு 25 ரூபா மாதச் சம்பளத்தில் ஆரம்பித்த அவரது ஆசிரியத் தொழிலில் அறுபது வயது பூர்த்தி அடையும் வரை ஆயிரக் கணக்கான மாணவர்களுக்கு நல்லாசிரியனாகத் திகழ்ந்தார்கள். 38 ஆண்டுகள் ஆசிரியத் தொழிலில் நேர்மையாகக் கடமையாற்றியவர். 31 ஆண்டுகள் ஓய்வூதியச் சம்பளமும் பெற்று பெருமிதத்தோடு வாழ்ந்தார்கள். கடைசியாக ஓய்வூதியமாக 750 ரூபாவரை பெற்று நல்ல தெய்வ கைங்கரியங்களைச் சாதித்தார்கள். குழந்தைகள் மனைவியினுடைய கடமைகள் முடிந்தபின் தோற்றத்தில் இல்லறத்தானாகக் காணப்பட்டாலும் உள்ளத்தால் துறவியாகவே வாழ்ந்தார்கள். உலகத்தில் மண், பெண், பொன் எதிலுமே ஆசையற்றவராய் தெய்வப்பற்று ஒன்றையே பற்றுக்கோடாகக் கொண்டு வாழ்ந்தார்கள்.

பிறருக்குதவி வேண்டும்போது - ''வலது கை கொடுப்பது இடது கைக்குத் தெரியாதவாறு போல'' - யாரும் அறியாது தம்மாலியன்ற உதவியைப் புரிந்து அமைதியாக இருந்து விடுவார்.

சுற்றத்தார் சூழ உள்ளவர்களில் பெரும்பான்மையோர் கமக்காரரர்கள். அவர்கள் தமது நன்றிக்கடனைத் தெரிவிப்பதற்காகத் தமது தோட்டப் பிரயோசனத்திலிருந்து ஏதாவது காய்கறி வகை அனுப்பினால் அப்பெறுமதியான பணத்தை உடனே கொடுத்துவிடுவார். பணம்பெற யாராவது மறுத்தால் சமயம் பார்த்திருந்து அப்பெறுமதியான வேறொரு பொருளை அவர் வீட்டிற்கு அனுப்பி வைத்துவிடுவார்.

ஏழாலைக் கிராமவாசிகளுக்கும் அவரது உற்றார் உறவினருக்கும் நண்பர்களுக்கும் நீண்டகாலமாக ஒரு ஆசை இருந்து வந்தது. அதாவது, சிறி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யது செய்தவர்களுக்கும், ஒன்றுமே செய்யாதவர்களுக்கும், தீமை செய்தவர்களுக்கும் பெருவிழா எடுக்கிறார்களே! நாம் ஏன் எங்கள் உபாத்தியாயருக்கு ஒரு விழா எடுத்துப் பார்க்கக்கூடாது? என்பதுதான் அவர்களது பேராசை. எப்படியோ 90 ஆவது வயதில் ஏழாலைக் கிராமமே திரண்டு 22-2-81 இல் சேவைநலம் பாராட்டும் பெருவிழா எடுத்தது. அவ்விழா நடந்து இரண்டு மாதங்கள் கூட ஆகவில்லை, விழாவில் ஏற்பட்ட கண்ணூறு போலும் 17-4-81 இல் சிவபதம் அடைந்துவிட்டார்கள்.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் எங்கெங்கு புராணப்படிப்பு நிகழ்கின்றதோ அங்கங்கெல்லாம் அவரைக் காணலாம். பாட்டு வாசிக்கும் கைங்கரியத்தில் ஈடுபட்டிருப்பார். எங்கெங்கு பஜனைக் கோஷ்டிகள் செல்கின்றனவோ அங்கங்கெல்லாம் அவரும் சேர்ந்து பாடிக்கொண்டிருப்பார். தம்மை மறந்து ஆனந்த நடனமும் செய்வார். அடியார்களைக் கண்டால் தாமே முதலில் அவர்களது பாதத்தில் வீழ்ந்து வணங்குவார்.

இவரது ஞானகுரு சடைவரத சுவாமிகள் ஆகும். சுவாமிகள் இவருக்கிட்டபெயர் சற்குணன் என்பது. ஒரு ஞானவான் வைத்த பெயரின் பொருளுக்கேற்ப வாழ்நாள் முழுவதும் சற்குணனாகவே வாழ்ந்தார்கள். எமக்கெல்லாம் வழிகாட்டியாக விளங்கினார்கள். அவரது ஆத்ம சாந்திக்காகவும் எமது ஆத்மசாந்திக்காகவும் பிரார்த்திப்போமாக!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலன் வரும்போது...!

— நா. அருமைநாயகம் J. P. —
(ஆத்மஜோதி நிலையம்-நாவலப்பிட்டி)

பிறந்துவிட்டால் இறப்பு என்பது நிச்சயம். காலன் எப்போதும் வந்தே தீருவான். 'காலன் வருமுன்னே கண் பஞ்சடையுமுன்னே குற்றால நாதனையே கூறு' என்கிறார்கள். அச்சமயத்தில் இறைவனை நினைக்கும் அந்த எண்ணம் வரவேண்டுமே!

உயிர் ஊசலாடிக்கொண்டிருக்கிறது என்பார்கள். அப்படி என்றால் மரணத் தறுவாயைக் குறிக்கும். உயிர் மரண சமயத்தில்தானா ஊசலாடுகிறது? எப்போதுமே அது ஊசலாடிக்கொண்டிருக்கிறது. இதைச் சிவ வாக்கியர்:

''பட்டமும் கயிறுபோல பறக்கநின்ற சீவனைப்
பார்வையாலே பார்த்தநீ படு முடிச்சுப் போடடா
திட்டவும் படாதடா சீவனை விடாதடா
கட்டடா நீ சிக்கெனக் களவறிந்த கள்ளனை''

என்கிறார். பட்டமும் கயிறும்போல சீவன் பறந்து கொண்டிருக்கிறது என்று சொல்வதால் உயிர் ஊசலாடுகிறது என்று தெரிகிறது. ஆனால் பார்வையால் பார்த்து படுமுடிச்சுப் போடடா என்றதால் உயிர் பார்வையால் பார்க்கக்கூடியது என்றாயிற்று. 'வால்மீகர் ஞானம்' என்ற நூலில் ஒரு சித்தர் உயிர் பார்க்கக்கூடியதே என்கிறார்.

## மரணம் என்றால் பயம்

நம் எல்லோருக்கும் மரணம் என்றால் பயம். இப்படிப் பயப்படுவது குழந்தைகள் இருளில் செல்லப்பயப்படுவது போன்றது. யாருக்குமே இறப்பது என்றால் அதற்கு அவர்கள் தயாராக இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவன் அதற்காகவே ஒவ்வொருவரின் முடிவு காலத்தை தெரியாமல் வைத்திருக்கிறார். இந்த விஞ்ஞான காலத்தில் என்னவெல்லாமோ கண்டு பிடித்திருக்கிறார்கள். ஆனால் ஒருவர் என்று மரணமடைவார் என்பதை மட்டும் இன்னும் கண்டு பிடிக்கவில்லை. இனியும் கண்டுபிடிக்க முடியாது. ஒருவனுக்கு தான் எப்போது இறக்கப்போகிறோம் என்று தெரிந்தால் அந்தக் காலத்திற்கு பல ஆண்டுகளுக்கு முன்பே அதையே நினைத்துக் கொண்டு மன வேதனைப்பட்டுக்கொண்டேயிருப்பான்.

இந்த சம்சார துக்கத்திற்கு மூலகாரணம் அஞ்ஞானம்தான். ஒவ்வொரு மனிதனிடமும் 'இதை நான் செய்தேன், இது என்னுடையது' என்ற அகங்கார மமகார பாவனைகள் அடங்கியுள்ளன. இந்தப் பாவனைகள் இல்லாதவர்களைக் காண்பதரிது. சாமானிய மனிதர்கள் 'நான்' என்றால் இச்சரீரம் என்றே கருதுகிறார்கள். இந்த அகங்கார மமகாரங்களை வென்றவர்களுக்கு மரணத்தைக்கண்டு பயமில்லை.

## ஆறிலும் சாவு; நூறிலும் சாவு

பூ பூத்து, காய் காய்த்து அது பழமாகப் பழுத்து பின்னர்தான் மரக்கிளையிலிருந்து விடுபடுவது என்பது சாதாரண நியதி. ஆனால் பிஞ்சிலேயே விழுந்துவிடுவதும் உண்டு. அதுபோலவே மனிதனுக்கு சாவு இவ்வளவு ஆண்டுகள் வாழ்ந்த பின் தான் வரவேண்டும் என்பதில்லை; ஆறு வயதிலும் வரலாம்; நூறு வயதிலும் வரலாம்.

மார்க்கஸ் அரேலியஸ் என்ற ரோமஞானி ஒரு சமயம் குறிப்பிட்டதாவது: 'நீ இந்த உல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கத்திலிருந்து ஐந்து வருஷம் முன்பு போனால் என்ன? பின்பு போனால் என்ன? எந்தச் சக்தி உன்னை உண்டாக்கிற்றோ, அந்தச் சக்தி உன்னைப் 'போ' என்கிறது. இதில் என்ன குற்றம். நாடகத் தலைவன் நடிகனைப் 'போ' என்பதில் என்ன தவறு? 'ஐயோ' நாடகம் முழுவதும் ஆடவில்லையே என்பாய். நாடகம் முடியவில்லை என்பது உண்மை. அதில் உன் பாகம் முடிந்துவிட்டது. நாடகத் தலைவன் இட்ட முடிவே முடிவு. நாடகத்துக்கும் நாடக முடிவுக்கும் நீ தலைவன் அல்ல. ஆகவே உடலை விட்டு நீங்குவாயாக. சாந்தி அடைவாய்.'

## எது மரணம்?

'உறவினர்களையும் நண்பர்களையும் நான் கொல்லமாட்டேன்' என்று அங்கலாய்த்த அர்ச்சுனனுக்கு கிருஷ்ணபகவான் உபதேசித்தது:-

'ஞானிகள் ஆத்மாவின் உண்மை நிலையை நேரில் அறிந்தவர்கள். இந்த உடல் மூச்சு விட்டுக் கொண்டிருந்தாலும் அதைப் பெரிதாக நினைக்க மாட்டார்கள்.

நானும் நீயும், இந்த அரசர்களும் ஒரு நாள் இருக்கப்போவதில்லை. மனிதன் குழந்தைப்பருவம், வாலிபப்பருவம், முதுமைப் பருவம் என்பவற்றை ஒன்றன்பின் ஒன்றாக அடையவில்லையா? முதல் பருவம் கழிந்ததற்காக வருத்தப்படுவது உண்டா? மரணம் என்பதும் அப்படித்தானே! பயனற்ற நிலையில் இருக்கும் ஓர் உடலை அடைவதல்லவா மரணம். அறிவு உடையவன் இதற்காக வருந்த மாட்டான்.

ஒரு காலத்தில் இல்லாமலிருந்து பின்பு தோன்றும் பொருள் உண்மையானதல்ல. இல்லாதது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எப்படித்தோன்றும்? இருப்பதாக இருந்தால் அதற்கு இன்மையும் கிடையாது! ஆகவே இல்லாமலிருந்து பின்தோன்றிமறையும் இம்மனித உடலை எப்படி உண்மை என்று நம்புவது? ஆகவே அர்த்தமற்றது.

அழுக்கான ஆடையை அகற்றி தூய ஆடையைக் கட்டிக்கொள்வது போல இந்த ஆத்மா ஒரு சரீரத்தை விட்டு வேறு சரீரத்திற்குப் போவது ஆகும்.

மரணத்தை வெல்வதாமே? அதை எப்படி வெல்வது?

இந்த வாழ்வு சர்வநிச்சயம் போல செயல்படுகிறான் மனிதன். 'இவ்வளவு பாடுபட்டு ஏன் சம்பாதிக்கிறாய்? என்று கேட்டால் 'மனைவி மக்களுடன் சௌக்கியமாக வாழ்வதற்கு' என்கிறான். இப்படி தேடியவற்றையும் தன்னைச் சேர்ந்தவர்களையும் விட்டுப்போக அவனுக்கு மனம் வருவதில்லை! அவ்வளவு பாசம்.

இந்தப் பாசபந்தத்தில் விழாமல் இருக்க அபிராமி பட்டரும் ஆசைப்பட்டார்.

**ஆசைக்கடலில் அகப்பட்டு அருளற்ற அந்த கன்கைப்**
**பாசத்தில் அல்லல்பட இருந்தேனை நின்பாதம் எனும்**
**வாசக்கமலம் தலைமேல் வலியவைத்து ஆண்டு கொண்ட**
**நேசத்தை என் சொல்லுவேன்! ஈசர் பாகத்து நேர்இழையே!**

எமனை காலால் உதைத்த திருக்கடவூர் சிவனின் தேவியினுடைய பக்தர் அல்லவா?

ஆதிசங்கரர் 'யமபடர்கள் என்னைப் பயமுறுத்தி இழுத்துச் செல்லும்போது கருணையோடு கூடிய என்தாய் உமையோடு என் இதயத்தில் வந்து யமவாதனைகளின் கஷ்டங்களை நிவாரணம் செய்' என்று இறைவனைப் பிரார்த்திக்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருணைக்கடலே! நான் மரணத்தறுவாயில் உன்னைப் பிரார்த்திக்கச் சக்தியற்றவனாக இருப்பேன். ஆகவே அப்போது என்னைக் கைவிட்டுவிடலாகாது என்று இப்பொழுதே உமது பாதங்களில் பலதடவை விழுந்து நமஸ்கரித்துக் கொள்கிறேன் என்கிறார் ஆதிசங்கரர்.

மரணத்தைக் கண்டு பயப்படாமலிருப்பது போலவே வாழ்க்கைப் பிரச்சினைகளுக்கும் பயந்துவிடலாகாது. சிலர் தற்கொலை செய்து கொண்டு மரணத்தின் உதவியை நாடுகின்றனர். இது கோழைத்தனம். ஈசன் கொடுத்த வாழ்க்கையை அதன் முடிவுகாலத்திற்கு முன் நாமே முடிக்க நமக்கு எவ்வித உரிமையுமில்லை. அதே போலத் தான்வேறு எந்தப் பிராணியையோ, பட்சியையோ கொல்ல நமக்கு அதிகாரம் ஏது?

நாம் வரும்போது எதையும் கொண்டுவரவில்லை; போகும் போதும் எதையும் கொண்டு போகப்போவதில்லை. அழுது கொண்டே பிறந்தோம். அப்போது நாம் பிறந்ததற்காகப் பலர் சந்தோசப்பட்டார்கள். இப்போது பலர் அழ நாம் மரணமடைகிறோம். யார் அழுது என்ன பயன்; கட்டிய மனைவி வீட்டு வாசல் வரை வந்து அழுவாள், சுற்றத்தார் சுடுகாடுவரை வந்து கண்ணைக் கசக்குவார்கள்.

ஒரு மனிதனின் வயது 100 என்று இப்போது சொல்லப்படுகிறது. வயது 80 ஆவதற்குள்ளேயே அவன் ஆட்டங் கண்டு விடுகிறான். 1000 பிறைகள் பார்ப்பவன் 84 வயதை அடைகிறன். ஆனால் ஒருவன் நல்ல பழக்கங்களாலும் நித்திய நைமித்திய அனுஷ்டானங்களினாலும் 120 வருஷம் சீவிக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலாம். பொறுப்பு ஏதுமில்லாமல் தன்னந்தனி யே வந்தோம். போகும் போது அப்படியே போக திட்டமிட வேண்டும். புதிய புதிய பந்தங்கள் தோன்றுகின்றன. அவை முறிகின்றன. சீராகின் றன. இப்படியே ஒன்றுமாறி ஒன்றுநடந்துகொண் டிருக்கிறது.

நாவலில் வருகிற பிறப்பு, இறப்பு, வெற்றி, தோல்வி, லாபம், நஷ்டம், கதாநாயகன், வில் லன் இவையெல்லாம் எப்படி இன்றியமையாத வைகளோ அப்படித்தான் வாழ்க்கையிலும் இந்த இரகசியத்தை அறிந்தவன்தான் ஜீவனையும் மர ணத்தையும் சமநோக்குடன் காண்கிறான். அவனி டம்தான் உண்மையான சக்தியும் விழிப்பும் இருக் கின்றன.

பிறப்புக்கும் இறப்பிற்குமிடையே நம் வாழ்க் கை அமைந்துள்ளது. கிடைத்தற்கரிய மனிதப் பிறவியைப் பெற்றோம். இனி எப்படி வாழ்வது என்பதே பிரச்சினை. ஏனெனில் இவ்வாழ்க்கையை பயனுள்ளதாகச் செய்து கொள்வது நம் கையில் இருக்கிறது.

வாழ்வு ஸாரமுடையது, ஆனந்தமயமானது, சுகம் நிறைந்தது. யாருக்கு? வாழத் தெரிந்தவர் களுக்கு. காலையில் துயில் எழுவதிலிருந்து இரவு படுக்கப் போகும்வரை ஒவ்வொரு காரியமும் இறைவன் நினைவோடேயே செய்து நம் முன்னோர் கள் பயன் அடைந்தனர்.

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து தெய்வத்து டன் கலந்துள்ள எமது மைத்துனரும், ஏழாலை அத்தியடி விநாயகர் கோவில் அறங்காவலருமான சிவத்திரு முருகேசு உபாத்தியாயர் அவர்களின் தூய வாழ்வும், சமயப்பற்றும், சிவத்தொண்டும் எதிர் கால சமுதாயத்திற்கு சிறந்த கலங்கரை விளக்க மாகும். அன்னாரின் ஆத்மசாந்திக்குப் பிரார்த்திப் போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### விநாயகர் துதி

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தி னிளம்பிறை போலு மெயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்று கின்றேனே.

மண்ணுலகத்தினிற் பிறவி மாசற
எண்ணிய பொருளெல்லாம் எளிதின் முற்றுறக்
கண்ணுதல் உடையதோர் களிற்றின் மாமுகப்
பண்ணவன் மலரடி பணிந்து போற்றுவாம்.

திருவும் கல்வியும் சீரும் தழைக்கவும்
கருணை பூக்கவும் தீமையைக் காய்க்கவும்
பருவ மாய்நம துள்ளம் பழுக்கவும்
பெருகும் ஆழத்துப் பிள்ளையைப் பேணுவாம்.

உம்பர் தருத் தேனுமணிக் கசிவாகி
ஒண்கடலிற் றேனமுதத் துணர்வூறி
இன்பரசத்தே பருகிப் பலகாலும்
என்றனுயிர்க் காதரவுற் றருள்வாயே
தம்பி தனக்காகவனத் தணைவோனே
தந்தை வலத்தா லருள்கைக் கனியோனே
அன்பர் தமக்கான நிலைப் பொருளோனே
ஐந்து கரத் தானைமுகப் பெருமாளே.

# பன்னிரு திருமுறை

## முதலாம் திருமுறை

தோடுடையசெவியன் விடையேறியோர் தூவெண்மதி சூடி
காடுடைய சுடலைப் பொடிபூசியென் உள்ளங் கவர்கள்வன்
ஏடுடைய மலரான் முனைநாட் பணிந்தேத்த வருள் செய்த
பீடுடைய பிரமா புரமேவிய பெம்மா னிவனன்றே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2-ம் திருமுறை

நீநாளும் நன்னெஞ்சே நினை கண்டாய் யாரறிவார்
சாநாளும் வாழ் நாளுஞ் சாய்க்காட் டெம்பெருமாற்கே
பூநாளுந் தலைசுமப்பப் புகழ்நாமஞ் செவிகேட்ப
நாநாளும் நவின்றேத்தப் பெறலாமே நல்வினையே.

## 3-ம் திருமுறை

கொல்வாரேனுங் குணம்பல நன்மைகள்
இல்லாரேனு மியம்பு வராயிடின்
எல்லாத் தீங்கையும் நீக்குவரென்பரால்
நல்லார் நாம நமச்சி வாயவே.

## 4-ம் திருமுறை

சலம்பூ வொடுதூபம் மறந்தறியேன்
தமிழோடிசை பாடல் மறந்தறியேன்
நலந்தீங்கினு முன்னை மறந்தறியேன்
உன்னுமம் என்னுவில் மறந்தறியேன்
உலர்ந்தார் தலையிற் பலிகொண்டுழல்வாய்
உடலுள் உறு சூலை தவிர்த்தருளாய்
அலந்தே னடியே னதிகைக் கெடில
வீரட்டானத் துறையம்மானே.

## 5-ம் திருமுறை

அன்னம் பாலிக்குந் தில்லைச் சிற்றம்பலம்
பொன்னம் பாலிக்கு மேலுமிப் பூமிசை
என்னம் பாலிக்கு மாறு கண்டின்புற
இன்னம் பாலிக்குமோ இப்பிறவியே.

## 6-ம் திருமுறை

தூண்டு சுடரனைய சோதி கண்டாய்
தொல்லமரர் சூளாமணிதான் கண்டாய்
காண்டற் கரிய கடவுள் கண்டாய்
கருதுவார்க் காற்ற எளியான் கண்டாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டுவார் வேண்டுவதே ஈவான் கண்டாய்
மெய்ந்நெறி கண்டாய் விரதமெல்லாம்
மாண்டமனத்தார் மனத்தான் கண்டாய்
மறைக்காட்டுறையும் மணாளன்தானே.

## 7-ம் திருமுறை

பத்தராய்ப் பணிவார்களெல்லார்க்கு மடியேன்
பரமனையே பாடுவாரடியார்க்கு மடியேன்
சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார்க்கு மடியேன்
திருவாரூர்ப் பிறந்தார்களெல்லார்க்குமடியேன்
முப்போதுந் திருமேனி தீண்டுவார்க் கடியேன்
முழுநீறு பூசிய முனிவர்க்கு மடியேன்
அப்பாலுமடிச்சார்ந்த வடியார்க்கு மடியேன்
ஆரூரன் ஆரூரி லம்மானுக்காளே.

## 8-ம் திருமுறை

அன்றே என்தன் ஆவியும்
உடலும் உடைமை எல்லாமும்
குன்றே அனையாய் எனைஆட்
கொண்ட போதே கொண்டிலையோ
இன்றோர் இடையூறு எனக்குண்டோ
எண்தோள் முக்கண் எம்மானே
நன்றே செய்வாய் பிழை செய்வாய்
நானோ இதற்கு நாயகமே.

## 9-ம் திருமுறை

ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்கும் தேனே
அளிவளர் உள்ளத்து ஆனந்தக் கனியே
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 10-ம் திருமுறை

அன்பு சிவம் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிகிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந் தாரே.

## 11-ம் திருமுறை

சிரித்திட்ட செம்பவ ளத்தின்
திரளுஞ் செஞ்சடைமேல்
விரித்திட்ட பைங்கதிர்த் திங்களும்
வெங்கதப் பாந்தளுந்தீத்
தரித்திட்ட அங்கையுஞ் சங்கச்
சுருளும் என் நெஞ்சினுள்ளே
தெரிந்திட்டவா தில்லைச் சிற்றம்
பலத்துத் திருநடனே.

## 12-ம் திருமுறை

உலகெலாம் உணர்ந் தோதற்கரியவன்
நிலாவுலாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத்தாடுவான்
மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்.

## நாமாவளி

கணபதி ஓம் ஜெய கணபதி ஓம்
கணபதி ஓம் ஜெய கணபதி ஓம்
மூஷிக வாகன கணபதி ஓம்
மோதக ஹஸ்தா கணபதி ஓம்
சாமர கர்ண கணபதி ஓம்
விளம்பித சூஸ்திரா கணபதி ஓம்
வாமன ரூபா கணபதி ஓம்
மகேஸ்வர புத்திரா கணபதி ஓம்
விக்ன விநாயக கணபதி ஓம்
பாத நமஸ்தே கணபதி ஓம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குருநாதா குருநாதா சற்குருநாதா ஓடிவா
தீனநாதா தீனபந்து திவ்ய வடிவே ஓடிவா
ஞானநாதா ஞானபோதா ஞானவடிவே ஓடிவா
அனுதநாதா ஆனந்தரூபா அற்புத சரித்திரா ஓடிவா
குருநாதா குருநாதா சற்குருநாதா ஓடிவா
ஓம் குருநாதா ஓம் குருநாதா
ஓம் ஜெகந்நாதா ஓம் ஜெகந்நாதா
ஓம் குருநாதா ஓம் ஜெகந்நாதா

நடராஜா நடராஜா
சிதம்பரேசா நடராஜா
நடராஜா நடராஜா
சிற்சபேசா நடராஜா
நடராஜா நடராஜா
தில்லைத் தாண்டவ நடராஜா
நடராஜா நடராஜா
ஆனந்தத் தாண்டவ நடராஜா

அம்பா பரமேஸ்வரி அகிலாண்டேஸ்வரி
ஆதிபராசக்தி பாலயமாம்
அம்பா பரமேஸ்வரி ஸ்ரீபுவனேஸ்வரி
ஸ்ரீலலிதேஸ்வரி பாலயமாம்
அம்பா பரமேஸ்வரி ராஜராஜேஸ்வரி
ஆனந்த ரூபிணி ஆண்டருள்வாய்
ஓம்சக்தி ஓம்சக்தி ஓம்சக்தி ஓம்
ஓம்சக்தி ஆதி பராசக்தி ஓம்
ஓம் மாதா ஓம் மாதா
ஸ்ரீமாதா ஜெய ஜெகன்மாதா
ஓம் மாதா ஓம் மாதா
ஸ்ரீமாதா ஜெய லலிதாம்பா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முருகா முருகா முருகா முருகா
முருகா முருகா திருமால் மருகா
திருமால் மருகா வடிவே லழகா
வடிவே லழகா வன்னமயில் வாகா
வன்னமயில் வாகா வந்தெனை யாள்வாய்
வந்தெனை யாள்வாய் வடிவேல் முருகா
வடிவேல் முருகா வேல்வேல் முருகா
வேல்வேல் முருகா வெற்றிவேல் முருகா
வெற்றிவேல் முருகா ஞானவேல் முருகா
ஞானவேல் முருகா சத்திவேல் முருகா
ஐயா முருகா அரகர முருகா
அரகர முருகா சிவசிவ முருகா
சிவசிவ முருகா ஜெயசிவ முருகா

பக்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மாதிருப் புகழ்பாடி
முத்தனு மாறெனைப் பெருவாழ்வின்
முத்தியே சேர்வதற் கருள்வாயே
உத்தமா தானசற் குணர்நேயா
ஒப்பிலா மாமணிக் கிரிவாசா
வித்தகா ஞானசத் தினிபாதா
வெற்றி வேலாயுதப் பெருமாளே

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்கள் ஓங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏழாலை இலந்தைகட்டி
# பாதாள ஞானவைரவர் கோவில்
# ஆலய பரிபாலன சபை
# இந்து இளைஞர் மன்றம்

விடுத்த

# அஞ்சலி உரை

ஏழாலை கிராமத்தின் தவப்புதல்வன், தன்னலம் கருதாத சமூகத் தொண்டன், பல்லாயிரக் கணக்கான மாணவர்களை உருவாக்கிய ஆசிரிய தீபம், அப்பர் பெருமான் காட்டிய சரியை நெறியில் நின்று தொண்டுகள் பல செய்த சமயத் தொண்டன் ஆசிரிய மணி உயர்திரு. சி. முருகேசு அவர்களின் பிரிவு ஏழாலை கிராமத்திற்கு ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும்.

கிராமசபை உறுப்பினராகவும், தலைவராகவும், கிராம நீதிமன்ற நீதிபதியாகவும் பல வருட காலம் நீதி தவறாது சேவையாற்றிய பெருந்தகையாளன். பல மாணவர்களின் உள்ளத்தைக் கவர்ந்த கள்வனாக, தனது தொழிலின் புனிதத்தையும் சிறப்பையும் உலகறியச் செய்த உத்தமனாக அவர் தன் பணியைச் செய்துவந்தார்.

இளம் வயதில் ஏற்பட்ட சிறு மனமாற்றத்தால் மதம் மாறிய ஆசிரியர் அவர்களை தாயார் முருகனை வேண்டி அவனுடைய அருளாலே அவரையே உணரச் செய்து மீண்டும் சைவனாக்கிய வரலாற்றை அவரே பலமுறைகள் உள்ளம் நெகிழ்ந்து பொது மேடைகளில் கூறியிருக்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிராம மக்களிடையே ஏற்பட்ட சிறு பிணக்கு களை யெல்லாம் தானே நேரில் சென்று சமாதான மாகவும் நீதியாகவும் தீர்த்துவைத்து கிராமத்தில் அமைதியை நிலைநாட்டினார். ஏழு கோயில்களில் ஒன்றாகிய பிள்ளையார் கோவிலின் பெரு வளர்ச் சிக்காகத் தன்னையே அர்ப்பணம் செய்தார்.

அவருடைய தொண்ணூறாவது வயதிலே அவ ரின் தன்னலமற்ற தொண்டைப் பாராட்டி ஏழாலை மக்கள் மாபெரும் பாராட்டு விழா ஒன் றினை (22-02-1981) அன்று எடுத்து மகிழ்ந்தார் கள். நூற்றாண்டையும் கடந்து முதுபெரும் கிழவ ராக ஏழாலைக் கிராமத்துக்கு பணி செய்யவேண்டு மென மக்கள் அனைவரும் ஆண்டவனைப் பிரார்த் தித்தார்கள். ஆனால் மாதம் மூன்று முடிவடை வதற்குள் அவரை ஆண்டவன் தன்னடியில் சேர்த்து விட்டான்.

ஏழு ஆலயங்களில் ஒன்றாகிய முருகமூர்த்தி கோவில் சங்காபிஷேகத்தில் பண்ணோடும் பக்தி யோடும் திருமுறை ஓதிவிட்டு, தெல்லிப்பளை துர்க்கை அம்மனையும் தரிசனம் செய்துவிட்டு, வழமை போல் இலந்தைகட்டி வைரவர் கோவில் சித்திரைப் பௌர்ணமி விழாவில் சித்திரபுத்திர நாயனாரின் கதையைப் படிப்பதாகவும் உறுதி கூறி விட்டு சிவபதம் அடைந்துவிட்டார்.

சித்திரைப் பௌர்ணமி தினமாகிய இன்றைய புண்ணிய தினத்தில் அவரின் இறுதிக்கிரியைகள் நடைபெறுவதால் அவரின் ஆன்மா சாந்தி அடைந்து இறைவன் திருவருள் நிழலில் சங்கம மாகிவிடும்.

காலன் நல்லதொரு ஆன்மாவைக் கவர்ந்த
பூரிப்பில் திளைக்கிறான்.
நாமோ நல்லதொரு தொண்டனை இழந்த நிலையில்
தவிக்கிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒழுக்கம்

பணத்தைவிட அறிவே உயர்ந்தது என்பதை எல்லோரும் ஏற்றுக்கொள்வர். அதுபோலவே அறிவைவிட ஒழுக்கமே உயர்ந்தது என்பதையும் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

ஆசிரியர்கள் ஒழுக்கத்தைப் புத்தகங்களிலிருந்து கற்றுக்கொடுக்க முடியாது. தங்களுடைய நடையிலிருந்தேதான் கற்றுக் கொடுக்க முடியும்.

கல்வியையும் பாண்டித்தியத்தையும் ஒரு தட்டிலும் உண்மையையும் தூய்மையையும் ஒரு தட்டில் வைத்தால் இரண்டாவது தட்டே தாழும். ஒழுக்கமில்லாத கல்வி தீமை செய்வதற்கான சக்தியை மட்டுமே தரும்.

எப்படி அழகான மாளிகையானது ஆள் நடமாட்டமில்லாமல் கிடந்தால் குட்டிச் சுவர் போல் தோன்றுமோ அப்படியே தான் ஐஸ்வரியங்கள் எல்லாம் இருப்பினும் ஒழுக்கமில்லாதவன் மனிதப் பதராகவே தோன்றுவான்.

வேதங்கள் எல்லாம் கற்றிருந்தாலும் அவற்றால் மனம் தூய்மையடையாதிருக்குமாயின் அவற்றால் யாது பயன்? கல்வியின் நோக்கம் எல்லாம் ஒழுக்கம் உண்டாக்குவதே. ஒழுக்கம் விழுப்பம் தரலான் அது உயிரினும் ஓம்பப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொன்மொழிகள்

உடம்பே, தான் என்று உணர்பவன் மரணத்திற்கு அஞ்சுவான். ஆன்மாவே, தான் என்று உணர்பவன் மரணத்திற்கு அஞ்சமாட்டான்.

—ஜைனமதம்.

மரணம் என்பது மலையினும் பெரிது. மயிரினும் சிறிது.

—ஷின்டோமதம்.

ஓட்டம் பிடித்து விட்டால் இயமனை ஏமாற்றி விடலாம் என்று எண்ணுவது மடமை. அவனைக் கேடு செய்யும் தேவதையாக எண்ணுவதை விட்டு நன்மை யருளுங் கடவுளாகக் கருதுவதே நல்லது. அவன் எப்பொழுது வந்தாலும் சரி, அவனை வரவேற்கத் தயாராக இருக்கவேண்டும். இறுதியில் இறக்கத்தான் போகிறோம். ஆயினும் அந்தநேரம் வருமுன் ஏன் இறந்து சாகவேண்டும்.

உடம்பைச்சாகாமல் இருக்கச்செய்யக்கூடிய மருந்தை இன்னும் விஞ்ஞானம் கண்டுபிடிக்கவில்லை. சாகாமலிருப்பது என்பது ஆன்மாவிற்கே உரிய இலட்சணமாகும். அது நிச்சயமாய் அழியாது. அதைத் தூய்மையாக வைத்துக்கொள்ள முயல்வதே மனிதனுடைய கடமை.

''இறைவனே நான் இறுதியை அறிய விரும்பவில்லை. இப்பொழுது செய்யவேண்டியதைக் காட்டினால் போதும்.''

இருக்கவேண்டிய இடம், நேரம், முறை முதலியன முன்கூட்டியே ஏற்படுத்தப்பட்டிருக்கின்றனவோ இல்லையோ எனக்குத் தெரியாது. எனக்குத் தெரிந்ததெல்லாம் அவனன்றி ஓர் அணுவும் அசையாது என்பதே. என்றேனும் ஒருநாள் இறக்கவேண்டி இருப்பதால் இப்பொழுது இறந்துவிடுமோ என்று சஞ்சலப்பட வேண்டாம். —காந்தி.

ஸ்ரீ ஆத்மஜோதி அச்சகம் - நாவலப்பிட்டி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org